# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2029 கார்த்திகை 23 புதன்கிழமை (09-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:11


# வன்னி நிலையை கண்டறிய ஒபடகே நேரில் அங்கு விஜயம்

## அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் கூட்டிச் சென்றனர்

வவுனியா, டிசெம்பர் 9

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நேரில் கண்டறிவதற்காக வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவரும் அத்தியாவசிய சேவைகள் நாயகமுமாகிய என். கே. ஒபடகே மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற் கொண்டு நேற்று அங்கு புறப்பட்டுச் சென்றார்.

அகதிகளுக்கான ஐ நா. தூதரக அதிகாரிகள் ஒபடகே குழுவினரை அங்கு கூட்டிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒபடகே குழுவினருடன் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணிக்குழுத் தலைவர் கலாநிதி டேவிட் ரட்ணவேலும் சென்றுள்ளார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் வாகனத்தில் சென்றுள்ள இவர்கள் அங்குள்ள அரச அதிகாரிகள் மற்றும் பொது நிறுவனப்பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலைக்கு விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகள் யாழ். சிறைச்சாலைக்கு நேற்று விஜயம் செய்து அங்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிட்டனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அதிகாரி

(10ஆம் பக்கம் பார்க்க)

## 7 தென்னாபிரிக்க எம். பிக்கள் இவ்வாரம் யாழ். வருவார்கள்!

கொழும்பு, டிசெ.9

தென்னாபிரிக்காவின் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது. அக்குழு இவ்வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கும் கண்டிக்கும் விஜயம் செய்யவிருப்பதாகத் தெரியவருகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் தென்னாபிரிக்கா சென்றபோது விடுத்த அழைப்பை ஏற்றே இக்குழு இலங்கைக்கு ஒரு வார கால விஜயத்தை மேற் கொண்டு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

நேற்று இக்குழுவினர் கொழும்பில் அமைச்சர் கதிர்காமரைச் சந்தித்துப் பேசினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் பயணிகளுடன் வெள்ளி கப்பல் புறப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 9

காங்கேசன்துறையிலிருந்து எதிர்வரும் 11 ஆம் திகதி ஆயிரம் பயணிகளுடன் ''லங்கா முடித்த'' கப்பல் திருகோணமலைக்கு செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இக் கப்பலில் யாழ். சிவில் அலுவலகத்தில் இருந்து 750 பேரும் வடமராட்சி அலுவலகத்தில் இருந்து 250 பேரும் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள், அரச ஊழியர்கள், நேர்முகப் பரீட்சைக்கு செல்வோர் ஆகியோருக்கு முன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் சேவைக்கு ஆஸியிலிருந்து கப்பல்கள்?

கொழும்பு, டிசெ. 9

திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்கும் இடையில் நிரந்தர பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்காக — ஆஸ்திரேலியாவில் இருந்து இரு கப்பல்களைப் பெறும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முந்நூறு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய வசதிகளைக் கொண்டதாக இரு கப்பல்களைப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கப்பல்களை நேரில் பார்வையிடுவதற்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் சீருடையினர் வெறியாட்டம்!

# 3 மாத சிசுவும், சகோதரனும் கிளாலியில் சுட்டுக் கொலை!

### தாய், மற்றொரு சகோதரன் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

கிளாலி காணிக்கை மாதா கோயிலடிப் பகுதியில் இரவு வேளை வீடு ஒன்றுக்குள் புகுந்த சீருடையினர் சிலர் வீட்டு விளக்கை அணைத்து விட்டு கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் செய்து வெறியாட்டம் நடத்தியதில் மூன்று மாதக் குழந்தையும், அக் குழந்தையின் சகோதரனும் உயிரிழந்தனர். மற்றொரு சகோதரனும் தாயும் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8. 30 மணியளவில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இரவு வேளை அந்த வீட்டுக்குச் சென்ற மூன்று படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் தினம்:

## திருமலையில் நாளை உண்ணாவிரதப் போர்!

### ரெலோ அமைப்பு ஏற்பாடு

திருகோணமலை, டிசெ. 9

சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை திருகோணமலையில் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த ரெலோ அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் வகையில் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து நாளைய தினத்தை எதிர்ப்பு தினமாக பிரகடனம் செய்துள்ள அந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை நல்லூரிலும் உண்ணாவிரதம்

### ஈ. பி. டி. பி. ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 9

மனித உரிமைகள் தினமான நாளை நல்லூரில் ஈ. பி. டி. பி. அமைப்பின் ஏற்பாட்டில் உண்ணாவிரதப்போராட்டம் ஏற்பாடாகியுள்ளது

நல்லூர் கந்தசுவாமிகோயிலுக்கு பின் வீதியில் அமைக்கப்படும் விசேட கொட்டகையில் நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இப்போராட்டம் நடைபெறவிருக்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் வெள்ள நிலைமை!

யாழ்ப்பாணம், டிசெ, 9

குடாநாட்டில் கடந்த இரு தினங்களாகத் தொடரும் மழை காரணமாக வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையப்பகுதி யாழ். பல்கலைக்கழகப்பகுதி, உட்பட நகரில் பல பகுதிகளில் வெள்ள நிலை காணப்பட்டது.

பல குளங்கள் நிரம்பி வழிகின்றன. வீதிகள் எங்கும் வெள்ளம் நிரம்பிவழிகின்றது.

நகரில் பிரப்பங்குளம் பகுதியில் உள்ள தனியாரின் களஞ்சியம் ஒன்றுக்குள் வெள்ளம் புகுந்ததால் அங்கு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட சிமெந்து பைகள் நாசமாகின எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீராவியடிக் கேணியின் ஒரு பகுதிச் சுவர்

(10ஆம் பக்கம் பார்க்க)



அப்ப...... மனித உரிமை பேணுறதை ருசுப்படுத்த கிளாலியிலை மற்றொரு சாதனை பாருங்கோ...!

## 'லயன் ஏயர்' பயணிகளுக்கு

## மரணச் சான்றிதழ்கள் குறித்து இன்று தீர்ப்பு

மன்னார், டிசெ. 9

இரணைதீவுக் கடலில் வீழ்ந்ததாகக் கருதப்படும் 'லயன் ஏயர்' விமானத்தில் பயணம் செய்தவர்கள் தொடர்பாக மரண விசாரணை நடத்தி மரணச்சான்றிதழ் வழங்குவது தொடர்பாக மன்னார் நீதிவான் ஏ. இளஞ்செழியன் இன்று தீர்ப்பு வழங்கவிருக்கிறார்.

வங்காலையைச் சேர்ந்த சீமான் அந்தோனிமுத்துபெர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்திற்கு கீழ்க்காணும் பெண் பாலார் தேவைப்படுகின்றார்கள் :-

- கணக்காளர்
- விற்பனையாளர்
- சிட்டை எழுதுநர்
- பொதி செய்பவர்கள்

**சான்றிதழ்களுடன் 12-12-98 காலை 10 மணிக்கு** நேரில் சமுகம் அளிக்கவும்.

சாவகச்சேரிப் பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.

இல. 07, டச் றோட்,
சாவகச்சேரி.

(61207)


# மரண அறிவித்தல்கள்

## வைரவநாதர் சரவணமுத்து

இணுவில் கிழக்கைச் சேர்ந்த வைரவநாதர் சரவணமுத்து 8-12-98 இல் கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவநாதர் சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் கமலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற தங்கமுத்து, கார்த்திகேசு, சின்னையா, தியாகராசா, பொன்னம்பலம் மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் கைலாசநாதன், சறோஜினிதேவி, இரகுநாதன், சாரதா, விஜயா, சந்திரா, கமலாதேவி, சிவலோகநாதன், தங்கலட்சுமி, சற்குருநாதன், யோகவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, இரகுநாதன், ஜெயராணி, சண்முகநாதன், பரமேஸ்வரன், யோகானந்தன், கேசவமூர்த்தி, தயாநிதி, மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜகுலன், தாருகாஜினி, பிரகலாதன், லம்போதரன், நிகாசன், லக்சுமி, ஐங்கரன், மயூரன், கரிகரன், றிசோதரன், உமையன், ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடா ரொரன்ரோவில் நடைபெறும்.

தகவல்;
**க.சண்முகநாதன்**
(மருமகன்)

குமாரலிங்கம் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(61210)

திருமதி
## நடராஜா விசாலாட்சி

திருமதி நடராஜா விசாலாட்சி காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் ஆனந்தகோபாலன், ரத்தினகாந்தி, சிதம்பரநாதன், செந்தில்நாதன், நவநாதன், செல்வநாதன், திருப்பரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம், பிரகஸ்பதி, ஞானேஸ்வரி, நாகதேவி, சரஸ்வதி, ஜெயந்தி, இராசநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் அர்ச்சுதன், வேல்வேந்தன், கௌசுகி, சிவதட்சனி, ஆனந்தபிரியதர்சினி, சபேசன், சனந்தன், சிவதீபா, கயமாமுகன், தனுஜா, திருமுருகன், சௌதாமினி, சௌமீரா, பிரணவன், சிவகாமி, கெள்சிகா, திருசங்கி, மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஸ்வினின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-12-98) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் மானிப்பாயில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
**ந.செந்தில்நாதன்**
(மகன்)

மூத்ததம்பி ஒழுங்கை,
மானிப்பாய்.

(61203)

## மூத்தார் சின்னத்துரை

(இளைப்பாறிய ஊழியர், சீமெந்து கூட்டுத்தாபனம்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்தார் சின்னத்துரை 06 - 12 - 98 அன்று காலமானார்

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் கேதாரகௌரி, நந்தகுமாரன் (டோகா) நவநீதகுமாரன், ஜெயக்குமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரின் பாசமிகு மாமனாரும், வைரமுத்துவின் (வெள்ளையப்பா) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-12-98 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு.

(61202)

## கட்டடத் திறப்பு விழா

பருத்தித்துறை, டிசெ. 9

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று காலை 10-00 மணிக்கு கல்லூரி அதிபர் வே. நேசரட்ணம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர் குணரட்ணம் சிவபாலனும் கௌரவ விருந்தினராக பருத்தித்துறைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினமும் கலந்து கொள்வர்.

(இ-118)


**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா, ரோஜா ஜனகராஜ், செந்தில்
நடித்த
**வீரா**
தினசரி
10-30, 2-00, 5-00
(சி/5711)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
30 அடி அகலத் திரையில்
அர்ஜுன் - தபு
நடித்த
தாயின் மணிக்கொடி
நேரடியாக CD யிலிருந்து
காட்சிகள் - 10 30-2.30
11 ஆம் திகதி முதல்
மீண்டும் கூட்டுத்தாபன
ரீல்ஸ் வெளியீடு!
குதூகல ஆரம்பம்
காதல் கோட்டை
(சி/5750)

**லிபேட்டி**
தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
சரத்குமார் - குஷ்பு
நடித்த
சிம்மராசி
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி:
070 - 212223
(61071)

**சிவா** திரையில்
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
அஜித்குமார் - தேவயானி
நடித்த
உயிரோடு உயிராக
(CD வெளியீடு)
தினசரி: 10-30, 2-30
(சி/5765)


யா / சென் ஜேம்ஸ்
மகா வித்தியாலயம்
நாளை (10-12-98)
நடைபெறவிருந்த
'ஒளி விழா'
பிற்போடப்படுகிறது.
புதிய திகதி பின்னர்
அறிவிக்கப்படும்.
- அதிபர்
(61205)

## கடல்வலயத் தடை மீனவர் பிரச்சினை குறித்து கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பகுதி டீ ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

'கடல் வலயத் தடையும் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் புவியியல்துறை விரிவுரையாளர் ஏ. எஸ். சூசை கருத்துரை வழங்குவார்

(இ-8)

## இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 9

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தால் நடத்தப்படும் ஒளி விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் செல்வி மேரி நிர்மலா அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

யூனியன் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தினால் நடத்தப்படும் ஒளி விழா அதிபர் சு. புண்ணியசிலன் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

பலாலி ஆசிரிய கலாசாலை ஒளி விழா இன்று காலை 9 மணிக்கு கலாசாலை சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். ஆயர் மேதகு சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
அன்னக்கண்டு
துரைராசா

தோற்றம்:
**24 - 04 - 1944**
மறைவு:
**09 - 11 - 1998**

அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
**கணவன், பிள்ளைகள், மருமகள், மருமக்கள், சகோதரர்கள், பேரமக்கள்.**

41/54, ஆஸ்பத்திரி
முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு.

(61199)


**Modern Education Centre**
Nelliady Karaveddy
**புதிய கல்வியாண்டு 99**
ஆண்டு 5 -- 9 வரையான வகுப்புக்கள்
ஆரம்பம்: 10-12-98 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி
ஆண்டு 5 க்கான விசேட புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புக்களும் நடைபெறும்.

**Seience Centre**
Nelliady Karaveddy
**புதிய கல்வியாண்டு 99**
ஆண்டு 10, 11 வகுப்புக்கள்
ஆரம்பம்: 12-12-98 சனிக்கிழமை காலை 7 மணி
நிர்வாகி.
(சி/5753)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 30 — 08 — 1978

உதிர்வு: 13 — 12 — 1995

செல்வி **சுகிர்தா சின்னத்தம்பி**

திதி: **09 — 12 — 1998**

சின்னஞ்சிறு சிட்டுப்போல சிறகடித்தாய் சுகி
வண்ணமொழி பேசி நெஞ்சினிலே நிறைந்திருந்தாய்
விண்ணுலகம் போன நீ மீண்டும் வராவிட்டாலும்
– எம்மனக்
கண்ணுலகில் உன்னுருவம் வாடாமல் காட்சிதரும்

நீங்கா நினைவுடன்
**குடும்பத்தினர்.**

44/9, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(சி/5752)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ. தி. மு. கவின் தலைமையிலான கூட்டணி கலைக்கப்பட்டுவிட்டது!

## ஜெயலலிதா அறிவிப்பு

புதுடில்லி, டிசெ, 9

இந்தியாவின் தமிழ்நாட்டிலே தற்போது அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி என்று எதுவுமில்லை. அது கலைக்கப்பட்டு விட்டது.

இவ்வாறு அ.தி.மு.க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



அ.தி.மு.க கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலுக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. ஒருவேளை மீண்டும் தேர்தல் வருமிடத்து புதிய அணி உருவாக்கப்படும்.

எனினும் சுப்பிரமணியம் சுவாமியின் தலைமையிலான ஜனதாக் கட்சி அ. தி. மு. க. அணியில் தொடர்ந்து அங்கம் வசிக்கும்.

இப்படி அவர் கூறினார்.

அ. தி. மு. க கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து நீடிப்பதாக அக் கட்சியின் நிறுவுனர் கூறியிருப்பது குறித்து தமக்கு எதுவும் தெரியவில்லை என்றும் —

தற்போது பாரதீய ஜனதாக் கூட்டணியில் அ.தி.மு.க அங்கம் வகிப்பதால் காங்கிரஸ் கட்சியுடன் உறவு வைத்துக் கொள்வது குறித்து கேள்வியே எழவில்லை என்றும் செல்வி ஜெயலலிதா மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு இடைக்காலத் தேர்தல் வர அ. இ. அ. தி. மு. க. ஒரு போதும் காரணமாக இருக்காது.

மத்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்ட விதம் வருத்தமளிப்பதாகவே உள்ளது. இது குறித்து வாஜ்பாய் என்னுடன கலந்தாலோசிக்கவில்லை. ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மட்டுமே என்னுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

அமைச்சரவை விஸ்தரிப்பு மீண்டும் இடம்பெறும் போது அதில் அ.தி.மு.க. இடம் பெறுவது குறித்து வாஜ்பாயுடன் ஆலோசனை நடத்துவேன் என்றும் ஜெயலலிதா கூறினார்.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வை. கோபாலசாமி தலைமையிலான ம.தி.மு.க, டாக்டர் இராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையிலான ராஜீவ் காங்கிரஸ், சுப்பிரமணியசுவாமி தலைமையிலான ஜனதா கட்சி ஆகியவை அ தி.மு க, தலைமையில் இணைந்து போட்டியிட்டது தெரிந்ததே.

(இ-8)

## மணலைக் கயிறாகத் திரிக்கிறார்

சென்னை, டிசெ. 9

தமிழ்நாட்டில் இளைஞர் ஒருவர் மூலிகை ஒன்றின் உதவியுடன் மணலைக் கயிறாகத் திரிக்கிறார்.

தஞ்சைமாவட்டம் கும்பகோணத்தைச் சேர்ந்த வி. சுவாமிநாதன் என்ற இந்த இளைஞரிடம் ஒரு பாத்திரத்தில் ஆற்றுமண் கொடுக்கப்பட்டது.

அதிலே மூலிகைச்சாற்றை சிறிதளவு ஊற்றி நேரடியாகவே சுமார் 3 அடி நீளமான கயிறை அவர் தயாரித்துக் காட்டினார்.

## விமான விபத்து

ரொறண்டோ, டிசெ. 9

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் 10 பயணிகளுடன் சென்ற சிறிய விமானமொன்று சென்.லோறன்ஸ் ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

சேத விவரம் மற்றும் உயிரிழப்பு குறித்து தகவல் எதுவும் தெரியவரவில்லை.

### துணை சபாநாயகர் பதவி

## திரிணாமூல் காங்கிரஸ் காங்கிரஸை ஆதரிக்கும்

புதுடில்லி, டிசெ, 9

நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகர் பதவிக்கு காங்கிரஸ் வேட்பாவர் பி. எம். சஜீதை ஆதரிக்கப்போவதாக திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் மமதா பனர்ஜி அறிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கூட்டணிக் கட்சிகள் சிலவும் இந்த விடயத்தில் தம் பக்கம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சஜீதை ஆதரிப்பது குறித்து பொதுக் கருத்து எட்டப்பட வேண்டுமென்று மமதா பனர்ஜி வலியுறுத்திய காரணத்தால் ஒகஸ்ட் மாதத்துக்கு துணை சபாநாயகர் பதவிக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சி நீட்டாவர்மாவை தனதுவேட்பாளராக அறிவித்தது.

இதேவேளை துணை சபாநாயகர் தேர்தல் அட்டவணையை வெளியிடுமாறு சபாநாயகர் ஜீ. எப். சி. பாலயோகியை காங்கிரஸ்கட்சி வற்புறுத்தியுள்ளது.

(இ-8)

### பாரதீய ஜனதாவுக்கு எதிரான

## வேலை நிறுத்தத்துக்கு செல்விஜெயலலிதா ஆதரவு

புதுடில்லி, டிசெ. 9

பாரதீய ஜனதாக்கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை பல்வேறு தொழிற் சங்கங்களும் அழைப்பு விடுத்துள்ள நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்துக்கு அ.தி.மு.க. ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

சென்னையில் செல்வி ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தம் முழுமையாக வெற்றி பெற விவசாயிகள், தொழிலாளிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் ஆதரவளிக்கும்படி ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான அ. தி. மு. க. இந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிப்பதாகக் கூறியிருப்பது துரதிர்ஷ்ட வசமானது என்று பாரதீய ஜனதாவின் தமிழ் நாடு பிரிவு பொதுச்செயலர் இல.கணேசன் தெரிவித்திருக்கிறார்.

செல்வி ஜெயலலிதா தமது இந்த முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றும் இல. கணேசன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த வேலை நிறுத்தத்தின் போது பேருந்துகளையோ, ரயில்களையோ மறியல் செய்யக் கூடாதென்ற தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியின் வேண்டுகோளை இல. கணேசன் வரவேற்றார்.

ஜெயலலிதா வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிக்க முன்வந்ததையடுத்து ஜனதாக் கட்சியும் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு அளிக்கும் என்று அக்கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி அறிவித்துள்ளார்.

(இ-8)

# வை. கோ. மகனின் திருமணத்தில் பெருமளவில் 'ஈழ ஆதரவாளர்கள்!

## பிரபாவின் தந்தை வேலுப்பிள்ளையும் பங்குபற்றினார்

புதுடில்லி, டிசெ. 9

அண்மையில் சென்னையில் நடைபெற்ற ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியின் மகனின் திருமணத்தில் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பெரும் எண்ணிக்கையில் ஈழம் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் வர்த்தக அமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோருடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் பெற்றோரும் விசேட விருந்தினர்களாக திருமண வைபவத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் பலரைக் கொண்ட ஈழம் ஆதரவாளர்களை திருமணத்துக்கு அழைத்தது குறித்து தமிழக மாநில அரசுக்கோ அல்லது மத்திய உள்துறை அமைச்சுக்கோ கோபாலசாமி முன்கூட்டியே அறிவிக்கவில்லை என்று சென்னை பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவில் ''Z'' வகையான கடுமையான பாதுகாப்பு வழங்கப்படும் தலைவர்களில் திருமணத்தில் கலந்து கொண்ட இந்த அமைச்சர்களும் அடங்குவர்.

ராஜீவ்காந்தி கொலையில் பின்னணியாக இருந்த சதி குறித்து விசாரணை செய்த ஜெயின் ஆணைக்குழு சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிட்ட 21 பேரில் ஒருவரான காசி ஆனந்தன் உட்பட கடுமையான ஈழம் ஆதரவாளர்கள் பலரும் இத் திருமணத்தில் கலந்து கொண்டது மட்டுமன்றி பேச்சுக்களின் போது புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது.

காசி ஆனந்தன் திருமணத் தம்பதிகளை ஆசீர்வதிக்கும் போது அவர்கள் புலிகளைப் போன்ற குழந்தைகளைப் பெறவேண்டுமென்று வாழ்த்தினார் என்றும் —

வைபவத்தில் கலந்து கொண்ட ஈழம் ஆதரவாளரான ஈழவேந்தன் பேசும் போது ஈழத் தமிழ் இயக்கத்தின் வலிமையான தூண் கோபாலசாமி என்று கூறினார் என்றும் — தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கோபாலசாமியை வர்ணிப்பதில் தவறுகள் ஏதுமில்லை என்றும் ஈழ இயக்கத்தின் [illegible] கான ஒரு மூல[illegible] தான் என்றும் ஈழவேந்தன் மேலும் தெரிவித்தார்.

திருமணத்தின் போது அத்வானி, ஜோர்ஜ் பெர்ணான்டஸ், இராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோருடன் சிறிது நேரம் அளவளாவியதாகவும் ஈழவேந்தன் கூறினார்.

இந்த திருமணத்தில் கலந்துகொண்ட மறுமலர்ச்சித் தி. மு. க. எம்.பியான கணேசமூர்த்தி தனது வாழ்த்துரையில் கோபாலசாமிக்கு பிரபாகரன் என்ற பெயரில் பேரப்பிள்ளை இருப்பதாகவும், வே. பிரபாகரனும், கோபாலசாமியும் மாத்திரமே தமிழர்களின் பாதுகாவலர்கள் என்றும் கூறியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் திருமணத்தில் ஈழம் ஆதரவாளர்கள் கலந்து கொண்டது குறித்து மத்திய அரசோ அல்லது மத்திய உள்துறை அமைச்சோ பிரச்சினை எதனையும் கிளப்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வை.கோபாலசாமி தெரிவிக்கையில் —

''நான் ஓர் ஈழம் ஆதரவாளன். [illegible] ஆதரவாளர்களைத் திருமணத்துக்கு அழைத்ததில் தவறில்லை'' என்றார்.

பிரபாகரனின் தந்தையார் திருமணத்தில் கலந்துகொண்டது பற்றி கோபாலசாமி குறிப்பிடுகையில் ''வேலுப்பிள்ளைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை'' என்றார்.

ஈழம் ஆதரவாளர்களை திருமணத்துக்கு அழைத்தது குறித்து அறிவிக்காததில் தவறில்லை என்றும் — கோபாலசாமி கூறினார்.

திருமண மண்டபத்துக்கு உள்துறை அமைச்சர் அத்வானி வந்த சமயம் பிரபாவின் தந்தை வேலுப்பிள்ளை மேடையில் அமர்ந்திருந்தார் என்றும் —

அத்வானி வந்தவுடன் அவர் இறங்கிச் சென்று காவலர் ஒருவருடன் கூடிய அறையொன்றில் அமர்ந்திருந்தார் என்றும் —

அமைச்சர் அத்வானிக்கு அசௌகரியம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கேஇவ்வாறு செய்யப்பட்டதாகவும் —

10 நிமிடங்கள் கழித்து வேலுப்பிள்ளை அதிமுக்கிய பிரமுகர்களுடன் மீண்டும் காணப்பட்டார் என்றும் சென்னைத் தகவல்கள் தெரிவித்தன.

(இ-8-10)

### உலக அரங்கில்

## ஐ. நா. வில் கம்போடியா

15 மாத இடைவெளிக்குப் பின்னர் ஐ.நா. வில் கம்போடியாவுக்கு இடம் கிடைத்துள்ளது.

கம்போடிய அரசியலில் இரு துருவங்களாக இருந்த ஹுன்செனும் றணறிட்டும் மீண்டும் இணைந்து கூட்டாட்சி அமைத்துள்ளது தெரிந்ததே. (இ-8)

## குறைந்ததூர ஏவுகணை ஈராக் சோதிக்கும்

குறைந்ததூர ஏவுகணைகளைச் சோதனை செய்ய ஈராக் தயாராகி வருவதாக அதன் வெளியுறவு அமைச்சர் முகம்மது ஷெட் அல் சஹாம் தெரிவித்தார்.

இந்த ஏவுகணைகளைத் தமது பாதுகாப்புக் கருதியே தயாரித்து வருவதாகவும்—

ஏற்கனவே 150 கிலோ மீற்றர் சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளைத் தாங்கள் வைத்திருப்பதாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவை – யாழ்ப்பாணம்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றத்துடன்
### இணைந்து நடத்தும்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை மலர்

## நல்லை ஆதீன முதல்வர் ஆசி

சைவத்திற்கும், தமிழுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை ஒட்டி யாழ், இந்துசமயப்பேரவை வெளியிடும் சிறப்பு மலருக்கு செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாம் இப்போதும், தமிழ், சைவம், கலாசாரம், பண்பாடு என்று கூறுவதற்கு எமக்கு மூலகாரணமாக இருந்து எமது காவலனாகத் திகழ்ந்தவர் நாவலர்.

அவருடைய இறுதி விருப்புகள் அனேகம். அவற்றில் சிலவற்றை அவர் நிறைவு செய்தார்; பலவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கண்ணீர் விட்டுக் கலங்கினார்.

அத்தகைய பெருமகனின் நினைப்புகள் நிறைவேறுவதற்கு நாமனைவரும் தியாக சிந்தையோடு வாழத் திடசங்கற்பம் பூணுவதோடு இந்து சமயப்பேரவை போன்ற ஸ்தாபனங்களின் பணிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது எமது தலையாய கடமையாகும்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**
குருமஹா சந்நிதானம்

திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## இந்து சமயப் பேரவைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

காரிருள் நீங்கக் கதிரவன் வருவது போல, கனல் நீங்க மழை வருவது போல, எம்மவர் கவலை நீங்க வந்தவர் ஆறுமுக நாவலர் பெருமான். சைவசமயமும் செந்தமிழும் அவர் இருகண்களாகக் கருதிய சொத்துக்கள்.

சமயத் தத்துவம் உணராமல் சமயத்துக்கேற்ற சமயிகளைக் கண்டார், ஆங்கில மோகத்தில் தமிழையும் சைவத்தையும் கைநழுவி விட்டுப் பிரியும் நம்மவரைக் கண்டார். நாவலருக்கு உள்ளம் கொதித்தது. சைவ சமயமே சமயம் என்ற தத்துவத்தை உணர்த்தவும் செந்தமிழ் சீர்பெறவும் உழைப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டார்.

தமிழ் வளர்க்க- வண்ணையில் நாவலர் பாடசாலை, சிதம்பரத்தில் ஒரு பாடசாலை வெவ்வேறிடங்களில் அவ்வவ்வூர் மக்களால் ஆக்கப்பட்ட பாடசாலைகள் மூலமாகச் சமுதாய மக்கள் தமிழ் படிக்க வைத்தார். நல்ல இலக்கிய இலக்கணங்களைத் தெளிய பல நூல்களை சைவத்துக்கும் தமிழுக்குமாக எழுதி எம்மை ஈடேற வைத்த பெருந்தகைப் புண்ணியன் ஆறுமுக நாவலர் அவர்கள். அந்த வள்ளல் நம்பொருட்டாகச் செய்த பணிகளைச் சிந்தித்து, அவரது அடிச்சுவட்டிலே எமது சமுதாயம் மலர வேண்டுமென உழைப்பதே நாம் நாவலர் பெருமானுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**

# சைவத்தையும் தமிழையும் காத்த
# வெற்றி வீரர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

**வ**ரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே நாகரிகத்தாலும், பண்பாட்டாலும் உயர்ந்து வாழ்ந்த பெருமை தமிழினத்திற்கு உண்டு. இச்சீரிய சிறப்புப்பெற்ற தமிழினம் சிவனையே போற்றிப் புகழ்ந்து வழிபட்ட பெருமைக்கும் உரியது. எனினும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட படையெடுப்புகளாலும் ஆட்சி மாற்றங்களாலும் நம்மவர்களில் சிலர் வேற்று மதங்களுக்கும் அந்நிய கலாசாரங்களுக்கும் அடிபணிய வேண்டியதாயிற்று.

பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் தோன்றி மறுசமய இருள் நீங்கவும், மேதினி எங்கும் தமிழ் வளர்ந்தோங்கவும் ஆத்மீகப் புரட்சியை ஏற்படுத்தினர்.

நாயன்மார்களின் பின் தமிழுக்கும் சைவத்திற்கும் அல்லும் பகலும் உழைத்து தன்னையே கரைத்தழித்துக் கொண்ட வீர ஆத்மீகபுருஷர் ஒருவர் உண்டெனில் அவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே,

1822 ஆம் ஆண்டு தோன்றிய நாவலர் 1834 ஆம் ஆண்டு பீற்றர் பார்சிவல் துரையின் பாடசாலைக்கு ஆங்கிலக் கல்விக்காகச் சென்றார். அங்கு இவருடைய தமிழ்ப்புலமையையும் இயல்பான விவேகத்தையும் அறிந்த பார்சிவல் துரை 1841 ஆம் ஆண்டில் இவரைத் தமது கல்லூரித் தமிழ்ப்பண்டிதராக நியமனம் செய்தார். நாவலரின் தமிழ் ஆங்கிலப் புலமையைக் கண்ட பார்சிவல் துரை பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி நாவலர் பைபிளை மொழி பெயர்த்து உதவினார். நாவலர் இக்கல்லூரியில் கற்பித்த காலத்திலும் தனது சைவத் தமிழ் தனிப் பண்பாட்டில் நின்று பணி புரிந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

நாவலர் பாதிரியாரின் பாடசாலையில் கற்பித்த காலத்தில் ஆங்கிலம் கற்றவர்களில் ஒருவரான மு. தில்லைநாதபிள்ளை என்பாரும் சு. சின்னப்பாபிள்ளை என்பாரும் கிறிஸ்தவ மதப் பிரவேசம் செய்ய நாட்குறித்திருந்தனர். இதனை அறிந்த நாவலர் இவர்கள் கிறிஸ்தவமதத்தில் புகாதவாறு தடுத்தார். இதனால் கோபமுற்ற பாதிரியார் நாவலர் இவ்விதம் நடந்து கொண்டமைக்கு விளக்கம் கோரினார். நாவலர் எனக்குத் தெரிந்த சைவ உண்மைகளைப் போதிக்க வேண்டியது எனது கடமை என்று கூறி பண்டிதர் உத்தியோகத்தில் இருந்தும் விலகிக்



கொண்டார். இது நாவலரின் வீரம்.

### பிரசங்கப்பேறு

இந்நிகழ்ச்சி நாவலரின் மனத்தைத் தொட்டது. சைவ உண்மைகளைச் சைவர்கள் அறியவேண்டியதன் அவசியத்தை அறிந்தார். சைவர்களை அழைத்துப் பிரசங்கம் செய்வதே வழியென்றெண்ணினார். 31-12-1847 வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய சுப வேளையில் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தனது முதற் பிரசங்கத்தைத் தொடங்கினார். நாவலரின் பிரசங்கம் வெள்ளி தோறும் தொடர்ந்தது. சொன்மாரி கேட்க மக்கள் திரண்டனர். சைவர்கள் சைவர்களாக வாழத் திடசங்கற்பம் பூண்டனர்.

இதுவே நாவலரின் பிரசங்கப் பேறு.

நம் மக்களின் நல்வாழ்விற்கு கல்வியே கண் என்பது நாவலர் முடிவு. தமிழ்க்கல்வியும் சைவ அபிவிருத்தியும் மேன்மையுறுவதற்காக தலங்கள் தோறும் பாடசாலைகளை நிறுவத் திட்டமிட்டார். இவர் இந்துக்களிடையே ஏற்படுத்திய இப் புத்துயிர்ப்பியக்கம் அந்நிய ஏகாதிபத்தியத்தை ஆட்டம் காணச் செய்தது 1849 தொடக்கம் 1858 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வண்ணார்பண்ணை சைவ வித்தியாசாலை முதல் யாழ். இந்துக் கல்லூரி வரையிலான பல பாடசாலைகளை நிறுவ முன்னின்றுழைத்தார். விவேகமும் ஒழுக்கமும் சைவத் தமிழ்ப் பற்றும் நிறைந்த மாணவர்களை அழைத்து அன்னம், வஸ்திரம் கொடுத்து உயர்வர்கிய தமிழிலக்கண இலக்கியங்களையும் சைவ சாஸ்திரங்களையும் கற்பித்தார்.

கிறிஸ்தவ மிஷனரிமார் சைவர்களுக்கு எதிராக வெளியிடும் பிரசுரங்களுக்கு பதிற் பிரசுரம் வெளியிடும் நோக்கில் அச்சு இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு தென்னாடு சென்றார். அங்கு இவர் மேற்கொண்ட சைவத் தமிழ்ப் பணி அளவிடற்கரியது. தென்தமிழ் நாட்டையே தம் சேவை நெறியினால் ஈழ நாட்டிற்குக் கடமைப்படுத்தி விட்டார். இவரின் நாவன்மையை உணர்ந்த திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு நாவலர் எனும் கௌரவ விருதை வழங்கியுள்ளது.

### இந்து சாதனம்

அப்பரடிகள் சமணப் பள்ளியில் பயின்று சைவத்தை உத்தாரணம் செய்ததுபோல் நாவலரும் கிறிஸ்தவ கல்லூரியில் சைவாசாரம் குன்றாது

(8 ஆம் பக்கம் பார்க்க)

**ஆ. மகாலிங்கம்**
செயலாளர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றம்

## வான் கொண்ட பெரும் புகழான்

தேன்கொண்ட மொழிபார்சேர் வாழ்வு வெறுத்து
நின்று
தான் கொண்ட சொத்தும் மூச்சும் சைவத்
தமிழுக்காக
ஊன் கொண்ட உடலும்தன் உயிரும் ஈந்து
வந்த நாவலனார்
வான் கொண்ட பெரும் புகழை யாரறிவார்
வையகத்தில்?

மறித்தழைத்த கிறிஸ்தவத்தார் மறுசமய
மாயைதனை
அறுத்தெறிந்து அண்ணலவன் சமயநெறி
அரிதென்றான்
பிறித்து வைத்துச்சைவர் தமைக்குழப்பு
பிரசாரங்கள்
தறித்தெறிய தனித்தமைத்தான் தரணிபோற்றச்
சாதனங்கள்!

தமிழென்பார் சைவமென்பார் தாமேதாம்
நாவலருமென்பர்
அமிழ்தான மொழிகாக்க அரியபட்டும் பதக்கமும்
வேணுமென்பர்
சிமிழ்கண்ணார் வாழ்விலே சிக்கியும் நின்று
கொள் வாரிதில்
அமிழ்ந்து வாழ்ந்தவரோ எங்கள் நல்லை நகர்
நாவலனார்!

**சி. சக்திகிரீவன்**

## புதுமைகள் பலவும் கண்டான்

தத்தளித்து நின்ற சைவத் தமிழ் காக்க
தனித்துத் தான்
எத்துணையுமின்றி எம்மவரின்ஏதமது நீங்கிடவே
அத்தனவன் துணைகொண்டான் ஆறுமுக
நாவலனாம் இந்துப்
புத்துயிர்ப் பியக்கம் செய்தான், புதுமைகள்
பலவும் கண்டான்.

**பேர. சந்திரசேகரம்**

## நாவலர் பெருமான்

பட்டம் பதவிகளைத் துறந்து நாவலர் நாம்
பட்டதுயர் பரிந்திறைஞ்சிப் பரமசிவன்
அடி பணிந்தார்
நட்டம் தனக்கன்று நின்முன்னே உயிர்விடுதல்
நமது தமிழ்க் கல்விக்கே நலிவென்ப தறிந்தார்
தொட்டி வைத்துக் கஞ்சிதந்த ஏழைபங் காளனிடர்
தொடரவோ உன்சிந்தை சிறிதேனும் இரங்காது
திட்டமிட்டு உனையிகழும் திருக்கூடம் வாழவோ
திருச்சிற்றம் பலத்திறைவா துணைபோனீர்
திருவுளமோ.

**சைவப்புலவர் க. நடராசா**

**மல்றி ஒயில்**
இணுவில்.

**அண்ணா கோப்பி**
இணுவில்.

**நாதன் களஞ்சியம்**
இணுவில்.

(சி-5749)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி வாழ் மக்கள் நிலைமைபற்றி

# ஐ. நா. வுக்கு பிரஜைகள் குழு மகஜர்

வவுனியா, டிசெ. 9

வன்னியில் தொடரும் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக அங்குள்ள தமிழ் மக்களின் வாழ்க்கை துயர் நிறைந்ததாக மாறியுள்ளது.

ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவிடம் வன்னிப்பிராந்திய பிரஜைகள் குழு மேற்கண்டவாறு முறையிட்டுள்ளது.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வன்னி பிரஜைகள் குழு அனுப்பியுள்ள மகஜரிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமிழ் மக்களின் வாழ்க்கை துயர் நிறைந்ததொன்றாக உள்ளது. அண்மைக்காலமாக வன்னிப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் இலங்கை அரசின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

இத்தகைய தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்களினால் அப்பாவித் தமிழ் மக்கள் சொல்லமுடியாத அளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கை விமானப் படையினரின் குண்டு வீச்சுத்தாக்குதல்களாலும், இராணுவ முகாம்களில் இருந்து இரவு, பகல் என்று பாராது ஏவப்படும் கடும் ஷெல் தாக்குதல்களாலும் மக்கள் பலர் இறந்தும்காயப்பட்டும் உள்ளனர்.

இத்தகைய சுவிரக்கமற்ற நடவடிக்கைகளினால் பலர் அங்கவீனர்களாக மாறியுள்ளதுடன் உடைமைகளையும் இழந்துள்ளனர். —இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-7)

## தென்னந்தோட்டங்களை உரியவர்களிடம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை

செம்பியன்பற்று, டிசெ 9

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்டங்களை உரியவர்களிடம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தென்னந் தோட்டங்கள் பல தற்போது படையினரின் பராமரிப்பில் உள்ளன.

இதனால் இதன் உரிமையாளர்கள் பாதிப்படைந்ததுடன் யாழ். குடாநாட்டில் தேங்காய் விலையும் உயர்ந்துள்ளது.

இத்தோட்டங்களை உரியவர்களிடம் பெற்றுக் கொடுத்தால் குடாநாட்டில் தேங்காய் விலை குறையும் என பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் கடந்த திங்களன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்காணிகளை மீள உரியவர்களிடம் பெற்றுக் கொடுக்க வடபிராந்திய கட்டளைத் தளபதியுடன் விரைவில் பேச்சு நடத்த இருப்பதாக பருத்தித்துறை பிரதேசசபைத்தலைவர் தெரிவித்தார்.

(இ-36)

## 1,920 குடும்பங்களுக்கான காசோலைகள் தயார்!

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு பெறவிருக்கும் மேலும் ஆயிரத்து 920 குடும்பங்களுக்கான காசோலைகள் யாழ். செயலக புனர் வாழ்வுப்பகுதியினால் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாகக் கொடுப்பனவு பெறவுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

★ மருதங்கேணி— ஆயிரம் குடும்பங்கள்.

★ பருத்தித் துறை —460 குடும்பங்கள்.

★ சாவகச்சேரி—140 குடும்பங்கள்.

★ யாழ்ப்பாணம் — 100 குடும்பங்கள்.

★ பளை — 100 குடும்பங்கள்.

★ உடுவில்— 120 குடும்பங்கள்.

கொடுப்பனவு பெற தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை அந்த அந்தக்கிராமஅலுவலர் பிரிவுகளில் பார்வையிடலாம் எனவும்—

இந்த வார இறுதிக்குள் மேற்படி கொடுப்பனவுகளை வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—மேலும் ஒரு தொகுதி குடும்பங்களுக்குக் கொடுப்பனவு வழங்குவதற்குரிய நிதி வந்து சேர்ந்துள்ளதாகவும்—

இந்த நிதி இன்று காசோலைகள் அனுப்பி வைக்கப்படுகின்ற பிரதேச செயலகங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகங்களுக்குக் குடும்பங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பிரித்து வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## பாலர் சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 9

பாலர்களின் சுகாதார கவனிப்பு என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று அண்மையில் கல்வியங்காடு முத்தமிழ் பாலர் பாடசாலையில் ஆசிரியை செல்வி சியாமளாதேவி தலைமையில் நடைபெற்றது.

பாலர்களின் பெற்றோர்கள் இந்தக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. சிவபாலராஜா கருத்துரை வழங்கினார்.

(ஐ)

# ஜன்னலைத் திறந்து பார்த்தபோது இரத்த வெள்ளத்தில் கிடந்தார்

## கோயில்வீதிக் கொலையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

காலஞ்சென்றவரின் வீட்டிற்கு நான் சென்ற போது வீடு பூட்டிக் கிடந்தது. குசினி ஜன்னலைத் திறந்து பார்த்த போது அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

இவ்வாறு நல்லூர் கோயில் வீதியில் திருடர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட திருமதி அப்பாக்குட்டி பரமேஸ்வரி (70 வயது)யின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த திருமதி இராமச்சந்திரன் கனகாம்பிகை(35 வயது) தெரிவித்தார்.

மரண விசாரணை அதிகாரி க. கேசவன் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து சாட்சிகளைப் பதிவு செய்தார்.

சாட்சியமளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:–

நான் காலஞ்சென்றவரின் வீட்டுக்கு அண்மையில் வசிக்கின்றேன். கடந்த 27 ஆம் திகதி காலஞ்சென்றவரின் வீட்டில் கேட்ட சத்தத்தை அடுத்து அங்கு சென்றேன். வீடு பூட்டப்பட்டிருந்தது. அங்கு வந்திருந்த அயலவருடன் சேர்ந்து குசினி ஜன்னலைத் திறந்து பார்த்த போது, அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததை அவதானித்தேன்.

குசினிக் கதவைத் திறந்து பார்த்தபோது அவருக்கு தலையிலும் முகத்திலும் வெட்டுக் காயங்கள் இருப்பதைக் கண்டேன்.

அத்துடன் அவருக்கு அருகே இரத்தக்கறை படிந்த கொடுவாக்கத்தியும் இருந்தது. உடனே அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம்— என்றும் தெரிவித்தார்.

இறந்தவரின் மைத்துனியான திருமதி சுதாகரன் சசிகலா (35 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்றவர் எனக்கு மைத்துனி முறையானவர். இவருக்குபிள்ளைகள் இல்லை. இவரது கணவரும் இறந்துவிட்டார்.

சம்பவதினம் இவரை வெட்டிக் காயப்படுத்திவிட்டு இவரிடமிருந்த சங்கிலி, காப்புகளும் பறித்துச் செல்லப்பட்டிருந்த[illegible] என்று தெரிவித்தார்.

[இ-5]

## வல்வைகுழாய்நீர்த்திட்டம் வெளிநாட்டு உதவியுடன்

## 7,000 குடும்பங்களுக்கு வசதி

யாழ்ப்பாணம், டிசெ. 9

வல்வெட்டித்துறைப் பகுதி குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக குழாய் நீர் விநியோகத் திட்டமொன்று ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளாலும், ஜீ.ரி. இசற் நிறுவனத்தினாலும் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலம் தொண்டமனாற்றிலிருந்து ஊறணி வரை உள்ள பகுதிகளில் வாழும் சுமார் ஏழாயிரம் குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப விழாவில் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர், செயலாளர், பிரதேச செயலர் மற்றும் ஜீ. ரி. இசற் அதிகாரிகளும் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(இ-5)

# கிறிஸ்மஸ் ஒளிவிழா

உரும்பிராயில் இயங்கி வரும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கிறிஸ்தவ மன்றத்தின் ஆதரவில் கிறிஸ்மஸ் ஒளி விழா நாளை வியாழக்கிழமையன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் உரும்பிராய் பங்குத் தந்தை வண. பிதா ஜி. அருள்நேசன் அடிகளார் கலந்து கிறிஸ்மஸ் செய்தியை வழங்கி உரை நிகழ்த்துவார்.

கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ–133–135)

★ ★ ★

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலையின் கிறிஸ்மஸ் ஒளிவிழா நாளை வியாழக் கிழமையன்று 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சகோதரி மே. த. லடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மானிப்பாய் பங்குத்தந்தை அருள் திரு. யூஜின் பிரான்சிஸ் அடிகளார், சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (இ–135)

## புதிய ஆலயம்

யாழ்ப்பாணம் டிசெ. 9

முள்ளியவளையில் புதிதாகக் கட்டப்பட்ட புனித திரேசா ஆலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. திறப்பு விழா ஒன்றின் திருப்பலி பூசையை முள்ளியவளை பங்குத்தந்தை நடத்தி வைத்தார், (இ-17)

# வாசகர் திருமுகம்

## சைக்கிளில் சந்தை செல்வோர் படும்கஷ்டம்

சுன்னாகம் மத்திய சந்தையைச் சார்ந்த சில வீதிகளில் சந்தை நேரங்களில் சைக்கிள்கள் நிறுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் பலவந்தமாக கட்டணம் அறவிடப்படும் சைக்கிள் பாதுகாப்பில் சைக்கிள்களை நிறுத்தும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது

பிரதேச சபையினதோ, குத்தகைக் காரர்களினதோ வருமானத்துக்காக சைக்கிள் பாவனையாளர்கள் இவ்வாறு வற்புறுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

சைக்கிள் பாவனையாளர்களுக்கு சகாயமாகவே சைக்கிளை வீதிகளில் பாவிப்பதற்காக 10ரூபா கட்டணமாக அறவிடப்படுகிறது. அவ்வாறிருக்க சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் மாதாந்தம் கிட்டத்தட்ட 50 ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

பாதுகாப்புப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய வீதிமருங்கில் சைக்கிள் நிறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாலேயே இவ்வாறு வற்புறுத்துவதாக கூறப்படுகிறது. ஆனால் சைக்கிள் தவிர்ந்த வாகனங்களை அவ்வாறு நிர்ப்பந்திப்பதில்லையே!

எனவே சம்பந்தப்பட்டவர்கள் சந்தை வாடிக்கையாளரின் நலன் கருதி உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

வே. மகேந்திரன்

சுன்னாகம்.

## மந்திகை வைத்தியசாலை வீதியூடான பஸ்சேவை நிரந்தரமாக்கப்பட வேண்டும்

மந்திகை சிலையடிச் சந்திக்கருகிலுள்ள மதகில் திருத்த வேலைகள் நடைபெறுவதன் காரணமாக மந்திகைச் சந்தி - சிலையடிச்சந்தி வீதி வழியாக மேற்கொள்ளப்பட்டு வந்த பஸ் சேவைகள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கள் அனைத்தும் தற்சமயம் மந்திகை வைத்தியசாலையின் முன்பாகச் செல்லும் வீதி வழியாகவே தற்காலிகமாக நடைபெற்று வருகின்றன.

இப்பாதை மாற்றத்தினால் வடமராட்சியின் இதர பகுதிகளிலிருந்தும் மற்றும் தென்மராட்சி வலிகாமம் பகுதிகளிலிருந்தும் மந்திகை வைத்தியசாலைக்கு பஸ் மூலம் வரும் நோயாளிகளும், வைத்தியசாலை ஊழியர்களும் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

முன்பு மந்திகைச் சந்தி - சிலையடிச் சந்தி வீதி வழியாக பஸ் சேவைகள் நடைபெற்ற வேளை வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மந்திகைச் சந்தி பஸ்தரிப்பிடத்திலிருந்து சுமார் 200 மீற்றருக்கும் அதிகமான தூரம் நடந்தே வைத்தியசாலையை அடைய வேண்டியிருந்தது. ஆனால் தற்போது பாதை மாற்றத்தினால் பஸ்ஸில் வரும் நோயாளி ஒருவர் வைத்தியசாலைக்கு முன்பாகவே இறங்கிக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இதனால் இதுவரை நோயாளர்கள் அனுபவித்து வந்த சிரமத்துக்குத் தற்காலிகமாக நிவாரணம் கிடைத்துள்ளது.

மேலும் மந்திகை சந்தை, கடைத்தெரு, தபால் நிலையம் என்பனவும் ஆஸ்பத்திரி வீதியிலேயே அமைந்திருக்கின்றன. இதனால் பஸ் சேவையைத் தொடர்ந்தும் ஆஸ்பத்திரி வீதி வழியாகவே மேற்கொள்ளப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறான பாதை மாற்றத்தினால் மந்திகைச் சந்தி, சிலையடிச்சந்திப் பகுதிகளில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடங்களைப் பாவிப்போருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு இவ் வீதிவழியாகச் சேவை தொடருமிடத்து ஆஸ்பத்திரிக்கு அருகில் பஸ்தரிப்பிடம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கும் இப்பகுதி மக்களும், அமைப்புக்களும் விருப்பம் தெரிவித்துள்ளன.

கரணவாய். தா. மு. கற்பநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் விருப்புரிமை வாக்குமுறை
# பொருத்தமற்றது என்கிறார் பீரிஸ்

கொழும்பு, டிசெ, 9
''தேர்தல்களில் விருப்புரிமை வாக்கெடுப்பு முறை எதிர்காலத்தில் பொருத்தமற்றது'' என்று நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல், பீரிஸ் தெரிவித்துள்ளார்.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விருப்புரிமை வாக்களிப்பு முறை பல்வேறு குறைபாடுகளை உடையது என்றும் —

இதனால் வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்றும்— அவர் தெரிவித்தார். பிலியந்தலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விருப்புரிமை வாக்கு முறையினால் ஒரே கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு இடையே கூட பிளவு ஏற்பட இடமுண்டு என அவர் சுட்டிக் காட்டினார்.

புதிய நூற்றாண்டில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பொதுவான தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். இதற்கு இடமளிக்கக் கூடிய அரசாங்க முறை ஒன்றினை உருவாக்குவது அவசியம் — என்றும் அவர் கூறினார். (ஐ-9)

## ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
18
—
03
—
1954

காலனின் பிடியில்
21
—
11
—
1997

அமரர்
### சின்னையா கந்தசாமி
திதி;- 09 - 12 - 1998

பாசமிகு என் அப்பாவே!
பண்புடனே எனை வளர்த்தீர்கள் - என்
அன்பு மொழி கேட்க எங்கிருந்தாலும்
ஆவலோடு ஓடி வருவீர்களே!
இன்று நான் பாலர் பாடசாலைக்குப் போகிறேன்
ஓடி வருவீர்களா ஒரு தரம் என்னைப் பார்க்க?
என்னை விட்டு நீங்கள் பிரிந்தாலும் என் மனதை
விட்டுப் பிரியாது ஒரு போதும் உங்கள் நினைவு.

தங்கள் பிரிவால் தவிக்கும்
**அன்பு மகள் க. கெய்ஷிகா**

வாகையடி,
மீசாலை மேற்கு,
மீசாலை.
(61194)


## பஞ்சாராத்தி கற்பூரம்
**PANCHARATHI CAMPHOR**

தூய கலப்படமற்ற கற்பூர தூள்கள் மூலம் தயாரான பஞ்சாரத்தி கற்பூர வில்லைகள் உருகும் தன்மையற்றது பிரகாசமான வெளிச்சத்தை முடியும் வரை தரும். தெய்வீக இனிமையான நறுமணத்தை வீசி பரவசமூட்டும்!

PURE GENUINE CAMPHOR TABLETS MADE FROM THE SUPER REFINED CAMPHOR POWDER GIVES BRIGHT ILLUMINATION TO THE FINISH, WITHOUT MELTING WITH DIVINE SWEET FRAGRANCE OF RAPTURE



**Manufacturer**
Serendib Homes (Pvt) Ltd
5th Floor, IBM Building, No.48, Navam Mw.,
Colombo-02 Tel: 441020 Fax: 441025
Factory Tel.: 074-812361

**Distributor in Pettah**
SUNDARAMS LTD.
341, Main Street, Colombo-11.
Tel: 330203, 325179, 432599
Fax: 448720

(சி/5627)


## சாரணர் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் குருளைச் சாரணர் தலைவர்களுக்கான கலைக் கூறு பயிற்சி முகாம் ஒன்றை நாளை வியாழக்கிழமை முதல் நான்கு நாள்களுக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடத்தவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியானது வதிவிடப் பயிற்சியாக இடம்பெறும் என மாவட்ட சாரண ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## இலவச தையற் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ, 9
யாழ். கல்வி வலய முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் இலவச தையற் பயிற்சி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ள புதிய பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களை டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அதிபர் மு. செல்லையா அறிவித்துள்ளார். (இ-8)

## பாராட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 9
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் முன்னாள ஆசிரியையான சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றமையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் சு. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சபா. ஜெயராசா, ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். (இ-8)

★ ★ ★

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நீண்டகாலம் ஆசிரியர் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களான சி. முத்துக்கிருஷ்ணர், ஐ. இராமசாமி ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று [illegible] 11 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-8)

## லயன்ஸ்கழக மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், டிசெ 9
நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் முழு அளவிலான மருத்துவப் பரிசோதனையை ஏற்பாடு செய்துள்ளனர்.

லயன் டாக்டர் க. பிரதீப்குமார் தலைமையில் பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவர்கள் இணைந்து மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வர்.

இதனைத் தொடர்ந்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் துறை சார்ந்த அதிகாரிகள் 'போக்குவரத்து விதி முறைகளும், விபத்துத் தவிர்ப்புகளும்' பற்றி உரை நிகழ்த்துபவர், (இ-8)


## MATHS CENTRE
M. M. V. Road, Nelliady

**புதிய கல்வியாண்டு — 99**

★ ஆண்டு **5** தொடக்கம் **11** வரையான வகுப்புகள்.
★ **ஆரம்பம்: 10 - 12 - 98 வியாழன்**
பிற்பகல் 3-30 மணி
★ ஆண்டு 5-க்கான விசேட புலமைப்பரிசில் வகுப்புகள் நடைபெறும்.
★ A/L DAY CLASS (கலை - வர்த்தகம்) விரைவில் ஆரம்பமாக உள்ளது.

(சி/5737)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சி. சரவணமுத்து
(சைவசிகாமணியும் ஓய்வுபெற்ற ஆசிரியரும்)

வையத்தில்
**14—12—1917**

தெய்வத்துள்
**20—11—1997**

திதி: 09 - 12 - 1998

ஈன்ற பொழுதிருந்து இமைபோல எமைக்காத்து
சான்றோராய் வாழ வழி அமைத்து இம் மேதினியில்
மேனாட்டுக் கல்வியே மிகச் சிறந்தது என நினைத்து
வான்மீது எமை அனுப்பி வாழ்வித்த எம் குருவே!
இன்றெல்லாம், எங்கு உம்மை காண்போம் என
நினைத்து
சிந்தை திகைக்க செய்வதொன்றும் தெரியாது
கண்ணீருடன் வாடி கன்று தாய் தேடுதல் போல்— நும்
''காதல் மனையாளும், காத்து வந்த மகள்மாரும்
காண என ஓடோடி வந்த பாச மகள் தானும்
ஐயா! ஐயா!! என்று அன்பு மகன்மாரும்
கல்வி நிறைந்த கன்னியவள் தாமும்
பேரா என அழைத்திட்ட பேரர்மார், அவர்கூட
புதிதாக வந்திட்ட பூட்டர்கள் சேர்ந்திடவே''
வயல் வெளிகள், வாழைத் தோப்புக்கள், பூசைக்கு
பூ எடுக்கும் பூங்காவனங்கள், அறவழி கூடங்கள்
ஆலய வாசல்கள், பாடசாலைகள், பாபா கூட்டங்கள்
எங்கெல்லாம் தேடியும் அங்கு உமைக் காணாது
அன்பின் உருவே! அருளின் வடிவே! நீர்
பூனாடு எல்லாம் போதித்தது போதும் இனி
வானாடு சென்று வாழ்வோம் எனநினைக்க தேவருலகு
உமைத்தேடி வந்து தேர் அனுப்ப, வானவர் வாழ்த்த
அங்கு வாழ என்று சென்றனையோ?

இன்று 9—12—98 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**திருமதி சரவணமுத்து குடும்பம்.**

குமாரபுரி,
கைதடி வடக்கு.
(61135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூலவேர் போரே!

பிள்ளைகளின் பட்டினி நிலையைக் கண்டு சகிக்க முடியாமல் மனமுடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டித் தற்கொலை செய்து விட்டார்.

மடு அகதிமுகாமில் தங்கியிருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குமரேசு யோகராசா என்ற சம்பந்தப்பட்டவரின் தற்கொலைச் சம்பவம் தமிழர்களின் இன்றைய மோசமான நிலையை சான்றுபடுத்துவதாக உள்ளது. இதனை வெறுமனே பரிதாபத்துக்குரிய சம்பவமாக நோக்க இயலாது.

போரின் காரணமாக மக்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்து, உடைமைகளை இழந்து, தொழில் இழந்து நிர்க்கதியாகின்றனர். அதனால் அகதி முகாம்களையே நாட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இயல்பாகவே உண்டாகிறது.

அகதி முகாம் வாழ்க்கை சொந்த வீட்டு வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் நிகராக முடியாது. அங்கு பல வசதிக் குறைவுகளும் பற்றாக்குறைகளும் வழமையானவை. நாள் கணக்கிலோ, மாதக்கணக்கிலோ அன்றி வருடக் கணக்கான அகதி முகாம் வாழ்க்கை மக்களை எல்லா வகைகளிலும் பாதித்து விடுகிறது. இதனால் வாழ்க்கையில் வெறுப்பும் விரக்தியும் தோன்றுவது தவிர்க்க முடியாததாகிறது.

வன்னிப் பிரதேசத்தில் போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் அங்கு வாழும் மக்கள் அனைவரும் விரக்தி நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். மேலும் அரசாங்கம் இந்த மக்களுக்கு உதவி செய்வதில் போதிய அக்கறை காட்டுவதில்லை. அவர்களின் நலன்களைப் பேணுவதாக அரசு கூறினாலும், காட்டிக் கொண்டாலும் செயலளவில் எதிர்மாறான விளைவுகளையே கா[illegible] முடிகிறது.

வன்னிப் பிரதேச மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய தேவைக்கான பொருள்கள் போதிய அளவில் வழங்கப்படுவதில்லை. அதற்கும் மேலதிகமாகக் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக முப்பது சத வீதமானோருக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் — செயற்பாடுகள் — தமிழர்களை பகைவர்களாகவே, எதிரிகளாகவே அது பார்க்கிறது — நடத்துகிறது — என்ற முடிவுக்கே எவரையும் இட்டுச்செல்கிறது. தமிழ்மக்களைப் பலவீனமாக்குவதன் மூலம் ஏதாவது இலக்கு ஒன்றை அடையும் நோக்குடனேயே அவர்களின் நலன்களை அரசு புறந்தள்ளுகிறது என்ற எண்ணத்தையும் உருவாக்குகிறது.

தமிழர்களை எல்லா வழிகளாலும் துன்புறுத்தி, கஷ்டமுறச் செய்து அவர்களை வாழ்க்கையின் ஓரத்துக்கே இழுத்துச் செல்வது அரசின் நோக்கமில்லையெனில், அதனை ஒட்டி இலக்கு எதுவும் இல்லையெனில், அரசு போரை நிறுத்த வேண்டும். போரே எல்லாத் துன்பங்களுக்கும் மூலவேர். இதனை உணர்ந்து அரசு போரை நிறுத்த முன்வர வேண்டும்.

# நெடுந்தீவுப் பகுதியில் அடை மழை வெள்ளத்தால் பலர் இடம் பெயர்வு

நெடுந்தீவு, டிசெ. 9

நெடுந்தீவில் தொடர்ந்து பலத்த மழை பெய்துவருகின்றது. கடந்த மாதம் பெய்த பெருமழையால் ஏற்கனவே தமது வீடுகளை விட்டு வெளியேறிய 80 குடும்பங்களுடன் நேற்றுமுன்தினம் பெய்த பெருமழையினால் மேலும் சுமார் 30 குடும்பங்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி ஆலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளன.

காற்று, மழை, கடல் கொந்தளிப்புக் காரணமாக வடக்கு கடற்கரை வீதி முற்றாகக் கடலரிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. கடற்கரையை அண்டிய மீனவர் குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பெருக்கினால் பல கால்நடைகளும் கூட இறந்து விட்டன.

வெட்டுக்கிளியை அண்டிய பிரதான வீதியில் சுமார் ஓர் அடி உயரத்தில் கடலை நோக்கி மழைநீர் பாய்ந்தவாறு உள்ளது. அதுதவிர மத்தியில் ஐயர் வீட்டடிச் சந்தியிலும் கிழக்கில் மாவிலித்துறையை அண்மித்த பகுதியிலும் பிரதான வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேசமயம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரண உதவிகளை வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடம் நெடுந்தீவு பிரதேச சபை வேண்டுகோள் விடுத்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்தார்.

(இ-111)

## விஞ்ஞானபீடக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சி நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது.

யாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார், விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

கண்காட்சியில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த மாணவர்களின் சுயமுயற்சியால் உருவாக்கப்பட்ட பல்வேறு சாதனங்கள் இடம்பெற்றுள்ளன.

கண்காட்சி ஆரம்பமான நேற்றைய தினமே யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் சமுகமளித்திருந்தனர்.

கண்காட்சி 10 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிவரை நடைபெறும்.

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், டிசெ 9

வண்ணை — சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 5 மணிக்கு நாவலர் குருபூசை இடம்பெறும்.

மேற்படி ஆலய சைவ சமய அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சைவ வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இடம் பெறும்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பண்டிதர் வ. பேரின்பநாயகம் கலந்து கொள்வார். (இ-7)

★ ★ ★

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி இந்து மாமன்றத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை இன்று புதன் காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் "இந்து சமய எழுச்சிக்கு நாவலர் செய்த பணிகள்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவினை சைவப் புலவர் முருகேசு முரளிதரன் நிகழ்த்துவார். (இ-118)

## நாவலர் பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 9

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் நிறுவப்பட்ட வண்ணை. நாவலர் மகாவித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் "நாவலர் பெருவிழா" நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ஐ. துரைராஜா தலைமையில் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சியாக யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் தி. கருணாகரனின் பண்ணிசைக்கச்சேரியும்; யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், வடமொழித்துறைத் தலைவருமான திருமதி கலைவாணி இராமநாதனின் "செயற்கரிய செய்த பெரியார்" என்ற தலைப்பிலான விசேட சொற்பொழிவும் இடம்பெறும்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என மேற்படி வித்தியாலய 150 ஆவது ஆண்டு நிறைவு விழாச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

(இ.7)

## இன்று

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர். குணரட்ணம் சிவபாலன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். (இ-118)

## பெரியோரைக் கௌரவிக்கும் செயலுக்கு

# சமுதாயம் தரும் வரவேற்பு எமக்கு உந்து சக்தியாகும்

### துணைவேந்தர் சொல்கிறார்

திருநெல்வேலி, டிசெ. 9

"இந்த மண்ணில் சமயப் பணி, இலக்கியப்பணி, சமூகப்பணி, கல்விப் பணி ஆகியவற்றில் சிறப்பாக சேவையாற்றி வந்த இப் பெரியார்களுக்கு எமது பல்கலைக்கழகம் கௌரவப்பட்டங்கள் வழங்கியதை சமுதாயம் ஏற்றுக் கொண்டிருப்பதும், வரவேற்றுக் கொண்டிருப்பதும் எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எதிர்காலத்திலும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு, ஏனையோரையும் கௌரவிக்க எமக்கு இது உந்துசக்தியாக இருக்கின்றது."

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம், யாழ். பல்கலைக்கழகத்தினால் கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் மு. கந்தையா மற்றும் கலாநிதிப் பட்டம் பெற்ற யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் நா. தணிகாசலம்பிள்ளை ஆகியோருக்கு அளித்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இவ் விழாவினை நடத்திக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் ஆரிய, திராவிடபாஷாபிவிருத்திச் சங்கம் மரபு வழி தமிழ் நலிவடைந்து வருவதைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். இச் சங்கத்திற்கென நிரந்தர கட்டடம், போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பாட விதானம் ஆகியன சரியான முறையில் இருக்குமானால் நிதி உதவிகளை பல இடங்களில் இருந்து பெற முடியும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், கல்வி அமைச்சு, மாகாண சபை ஆகியவற்றிடமிருந்து நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியநிலைமை உள்ளது.

பழைய பண்பாட்டுக் கல்வி முறைகளை ஊக்குவித்து வளர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (U N D.P.), யுனெஸ்கோ போன்ற நிறுவனங்களும் உதவும். இவற்றின் உதவிகளைப் பெற்று உரிய முறையில் இச் சங்கம் இயங்கி வருமானால் நல்ல எதிர்காலம் காத்திருக்கின்றது. இச் சங்கம் வழங்கும் பட்டங்களுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து கிடைக்கும் வாய்ப்பும் ஏற்படும்.

யாழ். வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நா. தணிகாசலம்பிள்ளை கலாநிதி பட்டம் பெற்றிருப்பது இப் பகுதியின் கல்வி [illegible]றத்திற்கு பெரும் உந்து சக்தியாக அமையும். கலாநிதிப் பட்டம் கல்விப்பணிப்பாளர் பதவிக்கு தனியானதொரு சிறப்பைத் தருவதாக உள்ளது என்றார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் பாராட்டுரை வழங்கையில் குறிப்பிட்டதாவது:-

யாழ். பல்கலைக்கழகம் இப்பெரியார்களுக்கு கௌரவப் பட்டங்களை வழங்கிக் கௌரவித்திருப்பது, சமூகத்தோடு நெருங்கிய தொடர்புகளை பல்கலைக்கழகம் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக ஆலய அறங்காவல் பணி, குழந்தைகளுக்கும் முதியோருக்கும் வாழ்வளிக்கும் பணி, சொற்பொழிவுப் பணி ஆகிய பல துறைகளில் சேவையாற்றி வரும் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை இன்று ஓர் அன்னையாக— அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியாக காண்கின்றோம். யாழ். பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குரிய கருப்பொருளாக ஏற்றுக்கொள்ளப்படும் அளவுக்கு ஈடுஇணையற்று காணப்பட்டது அவரின் பணிகள்.

எமது சைவசமயத்தில் முழு நேரமாக சமயப்பணியாற்றுவோர் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. முன்னர் ஆறுமுக நாவலர் அவர்கள் தனி ஒருவராக இருந்து சமயப்பணியாற்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். நாவலருக்குப் பின்னர் முழுநேரத்தையும் சமயத்திற்கு அர்ப்பணித்தவராக அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போற்றப்படுகின்றார். சைவ சித்தாந்தத்தில் புலமைத்துவம் பெற்றவரும் ஆய்வு விற்பன்னருமான ஏழாலையூர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் சிறந்த சைவ சித்தாந்த அறிஞராக மதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டிருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது — என்றார்.

கலாநிதி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, இலக்கிய கலாநிதி ஏழாலையூர் மு. கந்தையா, கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை ஆகியோர் பதிலுரை நிகழ்த்தினார்கள். கலைப்பீடாதிபதி அ. சண்முகதாஸ். முன்னாள் கல்விப்பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

(அ-135)

## நாளை

கார்த்திகை 24

வியாழக்கிழமை

திதி: ஸப்தமி

பிற்பகல் 3.20 வரை.

நட்சத்திரம்: பூரம்

முழுநாளும்

சுபநேரம்: 7.49- 9.19

ராகுகாலம்: 1.49-3.19

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தீங்கு சிறிதாக இருந்தாலும் அது மென்மையான இதயத்தைப் பெரிதும் புண்படுத்தி விடுகிறது.

—பாணபட்டா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### நாடகம்

யாழ். சேவையில் கனவும் நிஜமும் நாடகம் கேட்டீர்களா? உதயனில் பிரசுரமான நாடகக் கட்டுரைக்குப் பொருத்தமாக உள்ளதா? அந்த நாடகம் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணமா? கொழும்பா? நூலில் உள்ளது. 50/–.

(61168)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (கல் பேட்ஸ்)விற்பனைக்கு உண்டு. இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.

(61170)

### O/L MATHS

99 ஆம் ஆண்டில் உயர் பெறுபேறடைய, ஆண்டு 6 இலிருந்து 10 வரை கற்பிக்கப்படும். (வாரத்தில் 4 மணித்தியாலங்கள் வீதம்) ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

(61154)

### தவறிவிட்டது

முருகேசு துரைராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 49348335V வல்வெட்டி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொட்டியடி (உழுத்தம்பி), வல்வெட்டி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(61175)

தில்லையம்பலம் சதீஸ்குமாராகிய எனது பல்கலைக் கழக பதிவு ஆவணங்கள் சுன்னாகம் மலப்பைக்குச் செல்லும் ஆரம்ப ஒழுங்கைக்கும் அதன் முதலாம் ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காலந்தாழ்த்தாது 'லக்ஷ்மி விலாஸ்' சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்,

(61198)


## பரிசளிப்பு விழா

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆ. கமலநாதன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர் திருமதி இ. இராமலிங்கம், மேற்படி வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியை திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் மற்றும் மல்லாகம் மத்தி கிராம சேவகர் சு. பூலோகசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இதேவேளை மல்லாகம் வித்தியோதய பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் இதே தினத்தில் இடம்பெறும்.

(இ–7)

## திருநெல்வேலிப் பகுதியில் வெள்ளம்

தொடர்ந்து பெய்து வரும் மழையால் திருநெல்வேலி மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உள்ள பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

திருநெல்வேலி மேற்கில் உள்ள தாளையடி வீதி மற்றும் பிள்ளையார் வீதி, நாவலடி வீதி ஆகியவற்றை அண்டியுள்ள வீடுகளே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இப் பகுதிகளில் உள்ள வீதிகள் பலவற்றைத்திருத்துவதற்காக கொண்டு வரப்பட்ட கல்லும் மற்றும் பழைய கட்டடங்களின் இடிபாடுகளும் குறிப்பிட்ட வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளதனால் அந்த வீதிகளின்ஊடாகச் செல்லும் வெள்ளம் வீதிகளுக்கு அருகில் உள்ள வீடுகளில் புகுந்துள்ளது.

இதேவேளை அந்த வீதிகளின் ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

(இ-7)


லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

**அனுமதி - 1999**

புதிய மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:- க. பொ. த (உயர்தரம்)

வைத்திய பரம்பரை விண்ணப்பதாரிகளுக்கு சலுகையுண்டு.

**விண்ணப்ப முடிவு திகதி:- 31 - 12 - 1998**

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் 25/– செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

- பதிவாளர்

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(61197)


## 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**சற்குணம் நாகலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியை, புங்குடுதீவு)

**தோற்றம்:** 08—03—1914

**மறைவு:** 09—12—1973

'' கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது ''

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

நா. சற்குணலிங்கன்,
படப்பிடிப்பாளர்,
புதிய இல: 139 A,
4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C/5744)

## வடமராட்சி இந்து மகளிர் கட்டட வேலை ஆரம்பம்

பருத்தித்துறை, டிசெ. 9

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருமாடிக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாடிக்கட்டடத்தின் தள கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து வந்த வேளையில் கடந்த 1989 ஆம் ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது இதற்கான நிதி மீண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இக் கட்டட வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

இந்த வேலைகளுக்கு 12 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து முதற்கட்டமாக தளக்கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

அடுத்து முதலாம் மாடிக் கட்டட வேலைகளும் இரண்டாம் மாடிக் கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(இ-118)

## சைவத்தையும் தமிழை...

(நான்காம் பக்கத் தொடர்)

இருந்து, பயின்று, சைவ வினாவிடை, பாலபாடம் போன்ற நூல்களை வெளியிட்டார். வசன நடை கைவந்த வல்லாளரான இவர் கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற நூல்களைப் பதிப்பித்ததோடு அவற்றை வசன நடையிலும் எழுதி அச்சுப் பிழையின்றி வெளியிட்ட பெருமைக்குரியவர். கிறிஸ்தவர்கள் எமது மதத்துக்கு எதிராக வெளியிட்ட சைவ தூஷணத்திற்குப் பதில் கொடுக்கும் வகையில் சைவ தூஷண பரிகாரம் என்ற நூலை வெளியிட்ட பரசமய கோளரி இவர். இந்துக்களின் நலனைப் பேணவும், காப்பாற்றவும் இந்துக்களின் கருத்தைப் பிரதிபலிக்கச் செய்யும் வகையில் 'இந்து சாதனம்' என்ற பத்திரிகையை வெளியிட்டவரும் இவரே.

அந்நியர் ஆட்சியை மூத்தண்யமாக எதிர்த்த நாவலர், இந்துக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கில், 1879 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் பிரதிநிதியாக, நீறுதாங்கிய தமிழ்ச் செம்மல் சேர் பொன். இராமநாதன் அரச நிர்ணய சபை செல்வதற்கு வாக்குப் பெரும்பான்மைப் பலம் பெற்றுக் கொடுத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைச் சார்ந்தது.

நம் நாட்டில் அந்நியர் ஆட்சியின் போது ஏற்பட்ட கலாசார அழிவுகளைத் தடுக்க அவர் செய்த தியாகங்களை அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் காணலாம்.

அதன் ஒருபகுதி வருமாறு: பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனாயினேன்; பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை; என்னுடைய தமயன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாக இருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருடம் புரட்டாதி மாதம் (1848) பரித்தியாகஞ்செய்தேன். பார்சிவல் துரை ''நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது'' என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும் நான் அவ்விருத்தியில் விருப்பம் கை வைக்கவில்லை. நான் இங்கிலீஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் அநேகர், தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு அது தப்பாது சித்திக்கும் என்று அறிந்தும் அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணை மாத்திரம் கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுது அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காமல் வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது. என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவ சமயத்தையும், அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாகும்' என அவ்வறிக்கை தொடர்கிறது.

இத்தகைய புண்ணிய ஆத்மாவிற்கு யாழ்ப்பாண நிலம் எத்தனை இடத்தில் கோயில்கள் கட்டி வழிபடக் கடமைப் பட்டுள்ளது.

சைவத்தை உலகறிய வைத்த நாவலரின் சிலையை இரவோடிரவாக குப்பை ஏற்றும் வண்டியில் தூக்கிக் கொண்டு சென்று இன்னொரு கௌரவ இடத்தில் வைத்து விட்டோம் எனச் சமாதானம் கூறுவோர் அகக் கண் திறக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போம்.

நாவலர் குருபூசை நாளை சைவ உலகம் என்றும் போற்றிக் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம். ★


**உதயம்**

**பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம்**

**பீங்கான், ரம்ளர், ஐஸ்கிறீம் கப்ஸ், கறிவாளிகள், குத்துவிளக்கு, பந்திப்பாய், பிளாஸ்ரிக்பாய்கள், கம்பளம், கிடாரங்கள், சமையற் பாத்திரங்கள், பிளாஸ்ரிக்பைவர்கள், கதிரை, பந்தல் இன்னும் பல... ...**

அத்துடன் வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத் தொடர்புகளை காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம், எமது தொலைபேசி இலக்கம்: **2392**

உதயம்,
172, பிரதான வீதி, (மக்கள் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

(11638)



**யாழ். கரவெட்டி**
மாணிக்கவாசக வித்தியாலயத்தின்

**வருடாந்த**
**பரிசளிப்பு விழாவும் பாராட்டு விழாவும்**

**காலம்: 09—12—1998 புதன்கிழமை**
பிற்பகல் 2-00 மணி

முதன்மை விருந்தினர்: **திரு. க. சிவராசா**
(பணிப்பாளர், வலயம் III — வடமராட்சி)

பாடசாலையின் பதினொரு மாணவர்கள் 1998 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் சிறப்புச் சித்தியடைய அயராது பாடுபட்டு கற்பித்த அதிபரையும், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சபை,**
**பழைய மாணவர் சங்கம்.**

(சி/ 5751)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படத் தொழில் கருவிகளை

# கொழும்பில் இருந்து தருவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ.9

புகைப்படத் தொழிலுக்குத் தேவையான பொருள்கள் யாழ். மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்படவுள்ளன.

இச்சங்க நிர்வாகிகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

யாழ்.- கொழும்பு போக்குவரத்து துண்டிப்பினால் புகைப்படத் தொழிலுக்குரிய பொருள்களை யாழ்ப்பாணத்தில் பெற முடியாமலிருப்பதுடன் வாடிக்கையாளர்களின் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையேற்பட்டதையடுத்தே கொழும்பிலிருந்து இப்பொருள்களை கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த செப்ரெம்பர் மாதம் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவுசெய்து கொண்ட இச்சங்க நிர்வாகிகள் கொழும்பிலிருந்து புகைப்படத் தொழிலுக்குரிய பொருள்களை எடுத்து வருவது பற்றி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதனுடனும் பேச்சு நடத்தியுள்ளனர்.

கப்பல் மூலம் தொடர்ந்து இப்பொருள்களைக் கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கு ஏற்பாடுசெய்து தருவதாகக் கூட்டுறவு ஆணையாளர் சங்க நிர்வாகிகளிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை —

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் புகைப்படச்சுருள்கள் மற்றும் பொருள்களை சங்கத்துக்கென எடுத்துவருவதற்கும் புகைப்படச்சுருள்களை கழுவி எடுத்து வருவதற்கும் என சங்கத்தினால் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படவுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாவலர் நினைவு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 9

நாவலர் குருபூசையை முன்னிட்டு இந்து சமயப் பேரவை ஸ்ரீலஸ்ரீ நாவலர் பணியன்றத்துடன் இணைந்து நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

இவர்களுக்கான பரிசுகளை நல்லை ஆதீனத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் நாவலர் குருபூசை விழாவில் வைத்து யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் வழங்குவார்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

### கட்டுரை

★ முதலாம் பரிசு — தங்கராசா கணேசலிங்கம் — 360, கோயில் வீதி, நல்லூர்.

★ இரண்டாம் பரிசு — செல்வன் பொ. பிரபாகரன்— யாழ். இந்துக் கல்லூரி.

★ மூன்றாம் பரிசு — சா. சக்திதாசன் —சங்கத்தானை.

★ நான்காம் பரிசு — மோசஸ் ஷாந்தன் சத்தியகீர்த்தி — அரியாலை மேற்கு.

★ ஐந்தாம் பரிசு— செல்வி கஜானி நடராசா — சுன்டுக்குளி.

★ ஆறாம் பரிசு — த. மேகநாதன் — நல்லூர்.

★ ஏழாம் பரிசு — செல்வி பத்மபிரியா நாகேந்திரன் — வேம்படி மகளிர் கல்லூரி.

★ எட்டாம் பரிசு—செல்வி ஒளிவதனா அரசரத்தினம் — மீசாலை கிழக்கு.

### கவிதை

★ முதலாம் இடம் — பண்டிதை பொன். பாக்கியம் — சுழிபுரம் கிழக்கு.

★ இரண்டாம் இடம் —த. அருணகிரிநாதன் —நல்லூர்.

★ மூன்றாம் இடம் —பரமலிங்கம் தம்பிராசா — வண்ணை. வடமேற்கு.

★ நான்காம் இடம் — செல்வி குகப்பிரியா பேராயிரம் — நல்லூர்

★ ஐந்தாம் இடம் — நா. நல்லதம்பி — மட்டுவில் வடக்கு.

(உ-3)

## மல்லாகம் நீதிமன்றத்தில்

# பிணையில்விடுவிக்கப்பட்ட இருவர் உடன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 9

திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இருவர் நீதிமன்றத்திற்கு வெளியே வந்தபோது வேறு குற்றச்சாட்டுகளுக்காக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தாவடியில் திருட்டு நகைகளுடன் கைது செய்யப்பட்டவர்களான மார்க்கண்டு விஜயானந்தம் (வயது 20- தாவடி தெற்கு) சிவலிங்கம் சிவநேசன் (வயது 21 – இணுவில் மேற்கு) ஆகிய இருவரும் சுன்னாகம் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் மு. சபாநாதன் அனுமதித்தார்.

இவர்களிடமிருந்து பெறப்பட்ட நகைகள் உரியவர்களை இனம் கண்டு அவர்களிடம் ஒப்படைப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிணையில் விடுவிக்கப்பட்ட இருவரும் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தபோது திடீரென அங்கு வந்த யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸார் இருவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகக்கூறி அவர்களை மீண்டும். கைது செய்தனர்,

இவர்களுடன் இவர்களுக்கு பிணை நின்ற முத்துக்குமாரு மதீஸ்வரன் (யாழ்ப்பாணம்) என்பவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

(உ-5)

## நுண்கலைப்பீட

# வகுப்பறை சத்தத்துடன் பொறிந்து வீழ்ந்தது

### 35 மாணவர் அருந்தப்பு

யாழ்ப்பாணம். டிசெ. 9

யாழ். பல்கலைக்கழக— இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வகுப்பறை ஒன்றின் கூரை நேற்றுக் காலை 9 மணியளவில் பெரும் சத்தத்துடன் பொறிந்து வீழ்ந்தது.

மேற்படி சம்பவம் இடம்பெற்ற வேளை குறித்த வகுப்பறைக்குள் வாய்ப்பாட்டு வகுப்புநடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வகுப்பில் சுமார் 35 மாணவர்களும் விரிவுரையாளர்கள் சிலரும் இருந்தனர்.

எனினும் கூரை முறிந்து வீழும் சத்தம் கேட்டவுடன் மாணவர்களும், விரிவுரையாளர்களும் உடனடியாக வகுப்பறையில் இருந்து வெளியேறி உயிர் தப்பிக் கொண்டனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இராமநாதன் நுண்கலைப் பீடம் அமைந்துள்ள மருதனார்மடம் பகுதியில் பெரும் பதற்றத்தையே ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி சம்பவம் குறித்து துணைவேந்தருக்கு உடன் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்று கூரையின் இடிபாடுகளைப் பார்வையிட்டதோடு மாணவர்களுக்கு ஆறுதல் கூறினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## நாவலர் குருபூசை

நாவலர் குருபூசை தின நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெறவிருக்கின்றன.

பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலயத்தில் காலை 7 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவு, இந்து நாகரிக சிறப்புக்கலை மாணவிகளின் பண்ணிசை ஆகியன இடம்பெறும். (உ-30)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரி இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் குருபூசை இன்று காலை 11-30 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் மன்றத் தலைவர் ஸ்ரீ சாந்தரூபன் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் எஸ். விநாயகமூர்த்தி சிறப்புரையாற்றுவார். (உ-3)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக்கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் 'துருவன்' சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சி. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். றோட்டறிக்கழகத் தலைவர் றோட்டறியன் அ.பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-8)

## விஞ்ஞான...

(ஏழாம் பக்கத் தொடர்)

நேற்று நண்பகல் பெய்த கடும் மழை காரணமாக மின் விநியோகம் பாதிக்கப்பட்டதால் நேற்று இக் கண்காட்சியை சரிவர நடத்த முடியாது போனது என்றும் —

உடனடியாக மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு, சீரான மின் விநியோகம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் —

இன்றும், நாளையும் கண்காட்சியை சிறப்பாக நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (உ-3)

## யுனிசெவ் கண்காட்சியும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம். டிசெ. 9

உடுவில் கல்விக்கோட்டத்தின் யுனிசெவ் ஆரம்பக் கல்வி அபிவிருத்தித் திட்டக் கண்காட்சியும் கலைவிழாவும் இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் உடுவில் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வி. இராசையா பிரதமவிருந்தினராகவும், ஐக்கிய நாடுகள் குழந்தைகள நிதிய கள உதவியாளர் ஏ, சிறீஸ்கந்தராஜா, வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க. சச்சிதானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

யுனிசெவ் அபிவிருத்தித் திட்ட பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சையின் பரீட்சைக்குழுவினர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இருஇடங்களில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய வலயங்களில் அமைந்துள்ள நிலையங்களில் பணிபுரிவோருக்கு அன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் —

தென்மராட்சி வலயத்தில் பளை உட்பட அமைந்துள்ள நிலையங்களில் பணிபுரிவோருக்கு அன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் — கூட்டங்கள் நடைபெறும்.

இணைப்பு உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள் உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3)

## ஆசியுடன் அனுமதி அட்டை வழங்கல்

யாழ். மத்தியகல்லூரியில் இருந்து ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மதகுருமாரின் ஆசியுடன் அனுமதி அட்டை வழங்கும் வைபவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தமது பெற்றோரையும், ஆசிரியரையும் வணங்கி மதகுருவின் ஆசியுடன் அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்வர்.

## அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

பிரதி அமைச்சரும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவருமான வை. பி. டி. சில்வாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் இன்றுபிற்பகல் 4.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். இருதயநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அரசியல் கட்சிப் பிரமுகர்கள், தொழிற்சங்கவாதிகள் உட்படப் பலர் உரையாற்றுவர். (உ-3--173)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

(தேசிய பாடசாலை)

### பாடசாலை அனுமதி ஆண்டு 1 - ஆண்டு 6

மேற்படி வகுப்புக்களுக்கான அனுமதிக்காக விண்ணப்பித்த சகலரும் சேர்வதற்கான சகல ஆவணங்களுடன் பின்வரும் திகதிகளில் கல்லூரி அலுவலகத்திற்கு சமுகம் அளிக்கவும்.

ஆண்டு - 1 - 12-12-1998 சனிக்கிழமை காலை 9-00 மணி

ஆண்டு - 6 - 12-12-1998 சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணி

ஏனைய வகுப்புக்கள்:-

13 -- 12 -- 98 ஞாயிற்றுக்கிழமை

காலை 9. 00 மணி --- பிற்பகல் 2. 00 மணி வரை

முக்கிய குறிப்பு:

★ பலருடைய வேண்டுகோளுக்கு இணங்க முன்பு விண்ணப்பிக்க தவறியோர் மேற்குறிப்பிட்டவகுப்புக்களுக்கு விண்ணப்பித்து உடன் அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்.

★ மாணவரது கற்றல் நடவடிக்கை தடைப்படாது இருப்பதற்காக குறிப்பிட்ட இத்தினங்கள் தவிர்ந்த இடைக்காலங்களில் அனுமதி வழங்கப்படமாட்டாது.

— அதிபர்
யா/மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்.

(சி/5754)



## கண்ணீர் அஞ்சலி

06 - 12 - 1998 அன்று சிவபதமடைந்த

### திருமதி சுலோசனா தேவா

(ராதா அக்கா)

அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஊழியர்கள்
அலங்கார் ரெக்ஸ்

23, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(61211)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றுமாறு பொது அமைப்புக்களிடம் ஈ. பீ. டி. பி. கேட்டுள்ளது.

குடா நாட்டில் பலபகுதிகளில் இருந்தும் மக்கள் இந்த உண்ணாவிரதத்தில் பங்கு பற்றுவர் என்று ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (உ–3)

## திருமலையில்..

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்பு அதையொட்டி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகிறது.

நாளை காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இந்தப் போராட்டம் நடைபெறும் என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (உ-3)

## 3 மாத சிசுவும்,...

(முதலாம் பக்கத் தொடர்)

யினர் அந்த வீட்டில் இருந்த வயோதிபரை வீட்டுக்கு வெளியே அழைத்து வந்தனர்.

அவருக்குக் காவலாக ஒரு சிப்பாய் நிற்க, மற்றும இருவரும் வீட்டுக்குள் சென்றனர். ஒரு சிப்பாய் வாசலில் நிற்க மற்றவர் வீட்டுக்குள் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

இதில் அமிர்தநாதன் அமிர்தரதன் (வயது 15), அவரது சகோதரரான அமில்டன் (3 மாதம்) ஆகியோர் உயிரிழந்தனர். இவர்களின் சடலங்கள் பளைப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இறந்தவர்களின் தாயாரான அமிர்தநாதன் அமுதராணி (வயது 35, சகோதரரான தீபன் (வயது 4) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சமயம் வீட்டுக்குள் இருந்ததாகக் கூறப்படும் அமிர்தநாதன் அஜந்தன் (குட்டி வயது 11), அமிர்தநாதன் ரதனா (வயது 9), அமுதராணியின் சகோதரியான இன்னாசிமுத்து விநோதினி (வயது 17) அவர்களின் தாயாரான இன்னாசிமுத்து அயிரம்மா (வயது 55) ஆகிய நால்வரும் தெய்வதீனமாகப் பாதிப்பு ஏதுமின்றி தப்பித்துகொண்டனர்.

இவர்களுடன் இன்னாசிமுத்து (வயது 62) என்ற வயோதிபர் சம்பவம் நடந்த சமயம் வெளியே கூட்டிச் செல்லப்பட்டிருந்ததாலும் —

குடும்பத் தலைவனான அமிர்தநாதன் தேங்காய் விற்பதற்காக அன்று காலையே கொழும்புத் துறைக்குச் சென்று இரவு வீடு திரும்பாததினாலும்—

பாதிப்பு ஏதுமின்றித் தப்பிக்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி எஸ். ஸ்ரீதரன் படை அதிகாரிகளுடனும், யாழ். பொலீஸாருடனும் உரையாடினார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கும் அவர் நேரில் சென்று இச் சம்பவம் தொடர்பான தகவல்களை அவர்திரட்டினார்.

இச்சம்பவம் தொடர்பாக மூன்று படையினர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் —

விளக்கமறியலில் வைக்கப் படுவதற்காக இவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும் —

படையினரால் தகவல் தரப்பட்டதாக எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை தமது அமைப்பு கடுமையாகக் கண்டித்திருப்பதாக ஈ. பி. டி. பி. அமைப்பு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து உடன் கடும் நடவடிக்கை எடுக்கும்படி படை உயர் அதிகாரிகளைக் கோரியுள்ள அக்கட்சி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கும்படி அரசைக் கேட்டுள்ளது.

அவசர 'பக்ஸ்' செய்தி மூலம் இந்தப் படுகொலைச் சம்பவத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள யாழ். மாவட்ட எம். பியான ஆர். இராமேஸ்வரன் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தியுள்ளார்.

காட்டுமிராண்டித்தனமான இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ–3-5-15-117-139-180)

## சிறைச்சாலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

களான எஸ். சிறீதரன், ஜே. என். போமன் ஆகியோரே சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்து உரையாடினார்கள்.

கொலை, கொள்ளை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 5 படையினர் உட்பட 45 பேர் இந்தச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(உ–5–173)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

அகதிகள் முகாம்களுக்கும் இவர்கள் சென்று நிலைமைகளை ஆராய்வர்.

இடம்பெயர்ந்த மக்களின் நிவாரண வெட்டு மற்றும் எரிபொருள் வெட்டு ஆகியன தொடர்பாக இவர்கள் அங்கு விரிவாக ஆராய்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒபடகேயின் இந்த விஜயம் முடிவுற்றதும் அப் பிரதேசத்தில் விதிக்கப்பட்டுள்ள நிவாரண வெட்டு மூன்று மாத காலத்துக்குத் தளர்த்தப்படும் என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது. (உ-3-164)

## மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்)

னாண்டோ என்பவர் மன்னார் பொலீஸில் செய்த முறைப்பாடு ஒன்று தொடர்பாக மன்னார் பொலீஸார் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்பித்த 'பி' அறிக்கை தொடர்பாகவே நீதிவான் இன்று தீர்ப்பு வழங்கவிருக்கிறார்,

மன்னார் பொலீஸில் அவர் செய்த முறைப்பாட்டில்: ''எனது மகளும், மற்றொருவரும் குறிப்பிட்ட விமானத்தில் பயணம் செய்தனர் அவர்கள் இறந்து விட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டது. ஆகவே அவர்கள் தொடர்பான மரண விசாரணையை நடத்தி மரணச் சான்றிதழ் வழங்க வேண்டும்'' என்று கேட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டின் பேரில் பொலீஸார் நீதிமன்றத்தில்சமர்ப்பித்த விண்ணப்பம் மீதே இன்று தீர்ப்புவழங்கப்படவிருக்கிறது.

அத்துடன் தமக்கு இந்த விபத்துத்தொடர்பாக வேறும் முறைப் பாடுகள் கிடைத்துள்ளன என்றுபொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். (உ–3–164)

## 7 தென்னாபிரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி, சபாநாயகர், முக்கிய அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் ஆகியோரையும் இக்குழுவினர் சந்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மழை வெள்ளம் காரணமாக இரண்டொரு தினங்களுக்கு முன் இடிந்து வீழ்ந்தது. இதனால் கல்லூரிவீதியை அண்டியுள்ள— குளத்தின் கணிசமான நீளப்பகுதி— திறந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்த ஆபத்து நிலைமை குறித்துசம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் இராஜபாலனுக்கும் அதிகாரிகளுக்கும் இப் பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் மழை காரணமாக பயன் தருமரங்கள் முறிந்து வீழ்ந்தன.

இதேவேளை—

குடாநாட்டில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிவரை 99 8 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது என்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 51.5 மில்லி மீற்றர் மழை பெய்ததாக அந்த நிலையம் தெரிவித்தது.

இன்றும் மழை தொடர்ந்து பெய்யும்என்று எதிர்பார்க்கப் படுவதாக மேலும் தெரிவித்துள்ளது.

(உ–3–7–72-86-173)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தொழில் நுட்பவியலாளர்கள் கொண்ட குழு ஒன்று விரைவில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

னுரிமை வழங்கப்படவிருப்பதாகவும்—

அத்தகையோர் இன்று பிற்பகல் 12 மணிக்குப் பின்னர் தமது அலுவலகத்தில் பயணடிக்கட்டுக்களைப் பெறலாம் என்றும்—

யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கப்பலில் பயணம் செய்யவிருக்கும் பயணிகள் நாளை காலை 9 மணிக்கு மதிய உணவுடன் யாழ். ரயில் நிலையச் சந்தியில் சமுக மளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (உ-3)


தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
யாழ். மாவட்டம் நடத்தும்

**கலாசாரப் போட்டிகள் - 1998**

**இடம்:** யாழ்.மத்திய கல்லூரிமண்டபம், யாழ்ப்பாணம்.
**காலம்:** 1998 - 12 – 12 சனி காலை 9-00 மணிமுதல்

பேச்சு, அறிவிப்பாளர் / வீணை / புல்லாங்குழல் / மிருதங்கம் / வயலின் / ஓகன் / சாஸ்திரிய பாடல் தனி / குழு / கிராமியப் பாடல் தனி / குழு

1998-12-13 ஞாயிறு காலை 9-00 மணிமுதல்

நாடகம் தனி/குழு, கிராமிய நடனம் தனி/குழு, சாஸ்திரிய நடனம் தனி/குழு

குறித்த போட்டிகளுக்கு விண்ணப்பித்தோர் உரிய திகதியில் தவறாது சமுகம் தரவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**மாவட்ட அலுவலகம்,**
**தேசிய வீடமைப்பு செயலகம், கச்சேரி**
என்ற முகவரியில் தொடர்பு கொள்க.

உதவி இயக்குநர்,
**தே. இ. சே. ம.,**
யாழ்ப்பாணம்.

(61193)



**90 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**

அன்னை மடியில்
09 — 03 — 1936



இறைவன் அடியில்
11 — 09 — 1998

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

அமரர்

**பொன்னையா பத்மராஜா**

(ஆங்கிலத் தட்டெழுத்தாளர், யாழ். மாநகர சபை)

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் இன்று 09-12-98 இல் நடைபெறவுள்ளதால் அவற்றிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத்தெய்வம் திடீரென மறைந்த போது எம்மை அரவணைத்து சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர், உத்தியோகத்தர், ஊழியர் அனைவருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், மலர் வளையம் சாத்தியவர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், சகோதரர்.**

பிளாக் வீதி,
சங்கானை.

(61196)



''எட்டுப்பாடங்களுக்கும் மாதாந்தப் பரீட்சை கணனிப் பதிப்பில்'' ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் அமைதியான சூழலில் இயங்கும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்

**சயன்ஸ் அக்கடமி**

(நல்லூர் கோயில் முன்பாக)

கல்வியாண்டு 1999
ஆண்டு 4 முதல் O,L வரை
09—12—1998
பி. ப. 3–00 மணிக்கு ஆரம்பம்

ஆண்டுகள் 6,9இற்கான
**புதிய பாடத்திட்டம் ஆரம்பம்**
அனுமதிகளை உடன் பெறுங்கள்.

"98" ஆண்டிறுதிப் பரீட்சை
**பரிசளிப்பும், பதக்கம் சூட்டலும்**

பிரதம விருந்தினர்
திரு. S. T. B. இராஜேஸ்வரன்
புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்.

அனைத்துப் பெற்றோரும் ...

(61201)



**எலைற் கல்வி நிறுவனம்**
192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டு - 99**
**ஆண்டு 6 - G.C.E. O/L வரை**

புதிய பிரிவுகள்

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. T. அற்புதராஜா |
| விஞ்ஞானம் | — | திரு. K. பாலமுருகன் |
| தமிழ் | — | திரு. B. பாலகணேசன் |
| | | உங்கள் ஆசிரியர் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | திரு. S.V. சிவராசா |
| | | திரு. அன்ரன் |
| ஆங்கிலம் | — | திரு. S. பசுபதி |
| வர்த்தகம் | — | திரு. T. தர்மசீலன் |
| | | திரு. K. கனகேஸ்வரன் |

**ஆரம்பம்: 12 - 12 - 1998**
**சனிக்கிழமை காலை 8-00 மணி**

குறிப்பு: ஆண்டு 8 மாணவர்களுக்கு மாகாண மட்டத்திலான விசேட பயிற்சிப் பரீட்சைகளுடனான வகுப்பு.

— நிர்வாகி

(61206)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறை வேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்09-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org